

திருச்செந்தூர் ஒன்றியம் கீழ நாலுமூலைக்கிணறு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியினை தமிழக மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதா கிருஷ்ணன் திறந்து வைத்தார் உடன் ஒன்றிய செயலாளர் ஏ.பி ரமேஷ், மாவட்டத் துணை ஆட்சியர் ஐஸ்வர்யா, விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜனகர், நகரச் செயலாளர் வாள் சுடலை, வழக்கறிஞர் அணி கிருபா, வி.பி.செல்வகுமார், செந்தில், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாட்டின் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதி முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிறது அதில் முதல் நிகழ்வாக திருப்புல்லாணி ஊராட்சியில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் இந்நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் பங்கேற்றனர்.



பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட போகலூர் கிழக்கு ஒன்றியம் காமன்கோட்டை கிராமத்தில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி தொகுதி மேம்பாட்டு நிதி 2025–2026 கீழ் ரூபாய் 9 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ள புதிய நாடக மேடை கட்டுமானப் பணியை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன் துவக்கி வைத்தார் . இந்நிகழ்வில் போகலூர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் வழக்கறிஞர் கதிரவன் மற்றும் வழக்கறிஞர் குணசேகரன், மாவட்ட கழகப் பிரதிநிதி கார்த்திக் பாண்டி, முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பாதாள பைரவன் மற்றும் வேல் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாண்டியன்,இளைஞர் அணி துணை அமைப்பாளர்,அரசு ஒப்பந்ததாரர் மு.குமரகுரு,ஒன்றிய விவசாய அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஆதிதிராவிடர் நலகுழு அமைப்பாளர் கதிர்வேல், இளைஞர் அணி துணை அமைப்பாளர் ராமச்சந்திரன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ரியாஸ்,ஒன்றிய பொருளாளர் சரவணண், கழக நிர்வாகி மாணிக்கம்,மாநில கல்வி திட்ட இயக்குநர் முத்துச்சாமி(ஓய்வு), ஒன்றிய பிரதிநிதி சந்திரசேகர், கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தேனி வடக்கு மாவட்டம் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. ஆலோசனைப்படி போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தேனி வடக்கு ஒன்றிய சார்பாக குப்பிநாயக்கன்பட்டி ஊராட்சியில் உள்ள பாகம் எண் 298ல் நடைபெற்ற தமிழ்நாடு தலைகுனியாது என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி நிகழ்ச்சியில் தேனி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ம.சக்கரவர்த்தி தலைமையில் நடைபெற்றது. உடன் தேனி வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மகாராஜன், தேனி வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் முருக ஜெகதீசன், கிளைக் கழகச் செயலாளர் வேல்முருகன், தேனி வடக்கு ஒன்றிய மகளிர் அணி துணை அமைப்பாளர் பிரியா, பாக முகவர் குப்புசாமி மற்றும் BLCகள் மற்றும் கழக நிர்வாகிகள் கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டனர்.




மதுரை கே.கே நகர் பகுதி 33வது வட்ட தி.மு.க. சார்பாக கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த தினத்தை முன்னிட்டு ஆயிரம் குடும்பங்களுக்கு நலத்திட்ட உதவிகளை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் வட்டச் செயலாளர் மானகிரி ராஜேஸ் ஏற்பாட்டில் வழங்கினர். இவ்விழாவில் மாமன்ற உறுப்பினர் மாலதிகா, மாவட்ட துணைச் செயலாளர் மூவேந்திரன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன், கேகே நகர் பகுதி செயலாளர் அறிவுநிதி, மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துரை கோபால்சாமி, கழக நிர்வாகிகள் ராஜ பிரபு, சௌந்தரபாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் விஜயமௌஸ்மி, மகாலட்சுமி, கேகே நகர் கண்ணன், குமார் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் ஏராளமான பொதுமக்கள் பங்கேற்றனர்.



தேனி வடக்கு மாவட்டம் தனியார் மண்டபத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆசிப் கான் ஏற்பாட்டில் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி. தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. வருகின்ற 24ஆம் தேதி விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறும் இளைஞரணி கூட்டத்திற்கு தேனி வடக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் 3 ஆயிரத்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று என அதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாக கூறினார். உடன் சரவணகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்லபாண்டியன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பரணிஸ்வரன், செல்லதுரை, தெய்வேந்திரன், ஜெயக்குமார், ராம்ஜி மற்றும் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர்கேஆர்.பெரியகருப்பன் ஆகியோர் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் ராஜ அமுதன் ஏற்பாட்டின் பேரில் சிவகங்கை விளையாட்டு மைதானத்தில் மாவட்ட அளவில் இரண்டு நாள் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகளை சிவகங்கை நகர் கழக செயலாளர் சி.எம்.துரை.ஆனந்த் வழங்கினார் . உடன் நகர் காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் மற்றும் நிர்வாகிகள் உள்ளார்கள்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க இளைஞரணி சார்பில் துணை முதல்வர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் முகம்மது மீரான்மைதீன் ஏற்பாட்டில் 49 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை 1049 முன் களப்பணியாளருக்கு நலத்திட்ட உதவிகள்,4049 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்வு முன்னாள் நெல்லை மத்திய மாவட்டக் கழக அலுவலகத்தில் முன்னாள் அமைச்சர் கழக சிறுபான்மை நல உரிமைப் பிரிவு தலைவர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில இளைஞரணி துணை செயலாளர் இன்பா ஏ.என்.ரகு பங்கேற்று நலத்திட்ட உதவிகளையும்,அறுசுவை உணவுகளையும் வழங்கி துவக்கி வைத்தார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



சிவகங்கை ஒன்றியத்தின் சார்பில் அரண்மனை வாயிலில் ஒன்றிய பா.ஜ.க. அரசசைக் கண்டித்து முன்னாள் எம்.எல்.ஏ . வே.ராஜசேகரன் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நகர் கழக செயலாளர் சி.எம்.துரை. ஆனந்த் ,ஒன்றிய கழக செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம் ,எம். ஜெயராமன், பெ. மந்த காளை, திருமதி பவானி கணேசன் அ.அயூப்கான், மாநில காங்கிரஸ் பொதுச்செயலாளர் பச்சேரி சி.ஆர்.சுந்தரராஜன் உட்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.